


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.03.2017) பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய அரசு வழங்கிய காயகல்ப் விருதினை, பத்மநாபபுரம் அரசு தலைமை மருத்துமனைக்கு வழங்கி பாராட்டினார்

செ.வெ.எண்: 159/2017 நாள்: 03.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையில், மத்திய அரசு வழங்கிய காயகல்ப் விருதினை இன்று வழங்கி, பாராட்டினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பத்மநாபபுரம் அரசு மருத்துவமனைக்கு, மத்திய அரசு வழங்கிய காயகல்ப் விருதினை இன்று (03.03.2017) வழங்கி, பாராட்டி, தெரிவித்ததாவது:-

பாரத பிரதமர் அவர்களின் தூய்மை இந்தியா (SWACHH BHARAT) பொது சுகாதார அமைப்புகளில் காயகல்ப் (KAYAKALP) விருது என்று அழைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம், அனைத்து பொது மருத்துவமனைகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்து பராமரிக்கப்படுவதை ஆய்வு மேற்கொண்டு, உறுதி செய்து, ஆய்வின் முடிவில் சுத்தமாக பராமரிக்கப்படும் முதல் இரண்டு மருத்துவமனைகளுக்கு விருதுகளும், பரிசுகளும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், நமது கன்னியாகுமரி மாவட்ட பத்மநாபபுரம் அரசு மருத்துவமனை மாநில அளவில் முதல் இடத்தை பெற்றுள்ளது. நம் அனைவருக்கும் மிகுந்த பாராட்டுக்குரியதாகும். இந்த விருதின் மூலம் ஊக்கத்தொகையாக ரூ. 50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம்) கிடைக்கபெற்றுள்ளது. இத்தொகையின் பெரும்பகுதி முழுவதும் மருத்துவமனை மேம்பாட்டிற்காக செலவிடப்படும். இதுபோன்று நம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு பொது மருத்துவமனைகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திடவும், நோயாளிகளுக்கு நன்கு பரிசோதனை செய்து, நோய்களுக்கு விரைந்து தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மருத்துவ பணி என்பது, சேவை மனபான்மை, அர்ப்பணிப்புடன் பணி புரிந்திட வேண்டும். மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகளிடம் நோயின் தன்மை குறித்து அன்பாக விசாரித்திட வேண்டும்.

இந்த விருது, கடந்த 15.02.2017 அன்று டெல்லியில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி.நடாஜி அவர்களால் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, மருத்துவ கண்காணிப்பாளர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

எனவே, இவ்விருதினை பெற அரும்பாடுபட்ட அனைத்து மருத்துவமனை அலுவலர்களுக்கும், மருத்துவமனை ஊழியர்களுக்கும் பாராட்டு தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், இனிவரும் காலங்களில் இதுபோன்ற விருதினை பெற, அனைவரும் இணைந்து ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இவ்விழாவில் மாவட்ட இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் கன்னியாகுமரி மாவட்டம் மரு. ஏ. வசந்தி, முன்னாள் மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. ஏ.முருகன், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. பி. ராஜைய்யன், நோயாளிகள் நலச்சங்க உறுப்பினர் திரு. ஆர். அருள்கண்ணன் மற்றும் மாவட்ட சுகாதார திட்ட இயக்குநர் மரு. ரியஸ் முகம்மது, தலைமை பல் அறுவைசிகிச்சை மருத்துவர் மரு. ஜாஷ்வா, ஆயூர்வேத மருத்துவர் மரு. சுஜின் ஹெர்பர்ட் மற்றும் மருத்துவமனை அனைத்து பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.